**செய்தி வெளியீடு எண்: 288** **நாள்: 28.04.2018**

# தமிழ் வளர்ச்சித் துறை

## தமிழ்க் கவிஞர் நாள்

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2016 ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்த் தொண்டைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாளை தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாடப்படும் என அறிவித்தார். அதன்படி பாவேந்தர் பாரதிதாசனின் 125ஆம் ஆண்டு பிறந்த நாளிலிருந்து தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்க் கவிஞர் நாளை மேலும் சிறப்பிக்கும் வகையில் இவ்வாண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி. கே. பழனிசாமி அவர்கள் தமிழ்நாட்டில் நிறுவப்பெற்றுள்ள சங்க இலக்கியப் புலவர்களின் தமிழ்த்தொண்டைப் போற்றும் நினைவுத் தூண்களுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் சங்க இலக்கியப் புலவர்களின் பெருமையைப் பறைசாற்றும் சொற்பொழிவுகளையும் சிறப்பு நிகழ்வுகளையும் நடத்திட ஆணையிட்டுள்ளார். அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் மாசாத்தியார், திருநெல்வேலி மாவட்டம் மாங்குடி மருதனார், கரூர் மாவட்டம் கருவூர்ப் பன்னிரு புலவர்களான, கருவூர் ஓதஞானியார், கருவூர்க்கிழார், கருவூர் கண்ணம் பானனார், கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார், கருவூர்க் கதப்பிள்ளை , கருவூர்க் கலிங்கத்தார், கருவூர் சேரமான் சாத்தனார், கருவூர்க் கோசனார், கருவூர் நன்மார்பனார், கருவூர்ப் பவுத்திரனார், கருவூர் ஓதஞ் சாத்தனார், கருவூர் பெருஞ்சதுகத்துப் பூதநாகனார் ஆகியோரது நினைவுத் தூண்களுக்கு, தமிழ்க் கவிஞர் நாளில் மாலையணிவித்துச் சிறப்புச் செய்யப்படுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளான கவிஞர் நாள் என அறிவிக்கப்பட்ட இந்நாளைப் பெருமைப்படுத்தும் வண்ணம் இவ்வாண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறந்த நூல்களைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கும், அவற்றைப் பதிப்பிக்கும் பதிப்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

அவ்வகையில், தமிழ் வளர்ச்சித் துறையில் 2015ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டத்தின்கீழ் வரப்பெற்ற நூல்கள் பரிசுக்குரிய நூல்களாகக் கீழ்க்காண்ட பட்டியலில் உள்ளபடி வல்லுநர் குழுவால் தெரிவுசெய்யப் பெற்றுள்ளன. தெரிவுசெய்யப்பெற்ற நூல்களின் நூலாசிரியர்களுக்கும் அந்நூல்களை பதிப்பித்த பதிப்பகங்களும் இவ்விழாவில் சிறப்பிக்கப்பெறுகிறார்கள்.

| வ.எண் | வகைப்பாடு | நூல் | ரூ.30,000/- பரிசு பெறும் நூலாசிரியர் | ரூ.10,000/- பரிசு பெறும் பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 1. | மரபுக்கவிதை | 1. அற்புதத் தலைவி அம்மா<br>2. டாக்டர் ஜெ.ஜெயலலிதா பிள்ளைத் தமிழ் | 1. முனைவர் கரு. நாகராசன்<br>2. பேராசிரியர் செ.ஏழுமலை | 1. அன்பு பதிப்பகம்<br>2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| 2. | புதுக் கவிதை | கற்பனை வரங்கள் | திரு.சு,இராமச்சந்திரன்<br>(கவிஞர் சுரா) | செந்தமிழ் அறக்கட்டளை |
| 3. | புதினம் | 1. கிருதயுகம்<br>2. கருக்கலில் முறிபடும் சிறகுகள் | 1. திரு.ந.வேலுசாமி<br>2. இரவீந்திர பாரதி | 1. ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ்<br>2. காவ்யா |
| 4. | சிறுகதை | பிடிக்குள் அடங்கா மௌனம் | திருமதி சா.பவித்ரா நந்தகுமார் | பட்டாம்பூச்சி பதிப்பகம் |
| 5. | நாடகம் (உரைநடை, கவிதை) | நாகியின் நாடகக் கனிகள் | கலைமாமணி புலவர் நாகி<br>(நா.கிருட்டினசாமி) | ஐவர் பதிப்பகம் |
| 6. | சிறுவர் இலக்கியம் | அறம் கூறும் குறள் கதைகள் | முனைவர் கி.கிருட்டினசாமி | வையவி பதிப்பகம் |
| 7. | திறனாய்வு | 1. பதினெண்கீழ்க்கணக்கில் அறிவுத்துறைகளும் மரபு நுட்பங்களும்<br>2. முல்லை–மண்–மக்கள்–இலக்கியம் | 1. முனைவர் ஆ. மணவழகன்<br>2. முனைவர் வாணி அறிவாளன் | 1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>2. அருண் அகில் பதிப்பகம் |
| 8 | மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் | 1. கல்லாடனார் உரைநெறி (தொல்காப்பியம்)<br>2. தமிழ், சமஸ்கிருத இலக்கண மரபுகள் | 1. முனைவர் ச.குருசாமி<br>2. திருமதி பா. சங்கரேஸ்வரி | 1. இராணி பதிப்பகம்<br>2. பாவை பப்ளிகேஷன்ஸ் |
| 9 | பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் | அழகான அம்மா – ரஷ்ய சிறார் கதைகள் | தமிழில் யூமா வாசுகி | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., |
| 10. | நுண் கலைகள்<br>(இசை, ஓவியம், நடனம், சிற்பம்) | காரைக்காலில் நுண்கலைகள் | திருமதி சித்ரா கோபிநாத் | கங்கை புத்தக நிலையம் |

/2/

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் | முத்தமிழ் அகராதி (தமிழ் – தமிழ்) | நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன் | முத்தமிழ் பதிப்பகம் |
| 12. | பயண இலக்கியம் | கல்லோ காவியமோ – மனங்கவர் கம்போடியா பயணம் | பேரா. வ.இன்பசேகரன் | விநாயகா அச்சகம் |
| 13. | வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு | தடம் பதித்த தலைவர்கள் நினைவுகளும், நினைவகங்களும் | திரு. எஸ்.பி.எழிலழகன் | சுரா பதிப்பகம் |
| 14. | நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு | செம்பியன்மாதேவி கலைக்கோயில்கள் தொகுதி –1 | முனைவர் திருமதி கோ.எழில் ஆதிரை | இயல் வெளியீடு |
| 15. | மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் | நந்தரின் கொங்குப் பெருமகன் வல்வில் ஓரி | திரு. நந்தர் | நந்தர் பதிப்பகம் |
| 16. | சட்டவியல், அரசியல் | 1. கூட்டுறவு சங்கங்களுக்கான சட்டங்களும் விதிகளும்<br>2. எம்.ஜி.ஆர். எழுத்தும் பேச்சும் பாகம் 1 மற்றும் 2 | 1. வழக்கறிஞர் முனைவர் எஸ்.சேசாசலம்<br>2. திரு. வே. குமரவேலு | 1. வனிதா பதிப்பகம்<br>2. முல்லை பதிப்பகம் |
| 17. | பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் | வெற்றிதரும் மேலாண்மை | நெல்லை கவிநேசன் | குமரன் பதிப்பகம் |
| 18. | மருந்தியல், உடலியல், நலவியல் | 1. நம் ஆரோக்கியம் நம் கையில்<br>2. உடல்நலம் காத்திடும் உன்னதக் குழம்புகள் | 1. டாக்டர் கு. கணேசன்<br>2. திருமதி சரசுவதி அரங்கராசன் | 1. குமுதம் பு(து)த்தகம் வெளியீடு<br>2. முகிலன் பதிப்பகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) | 1. நலம் தரும் நாட்டு மருந்துகள்<br>2. ஆரோக்கிய வாழ்விற்கு உணவே மருந்து | 1. டாக்டர் கலைமதி<br>2. மரு. க. திருத்தணிகாசலம் | 1. குமரன் பதிப்பகம்<br>2. வனிதா பதிப்பகம் |
| 20. | சமயம், ஆன்மிகம், அளவையியல் | திருமந்திரத்தின் மறைபொருளும் விளக்கமும் | திரு.பால. இரத்தினவேலன் | நர்மதா பதிப்பகம் |
| 21. | கல்வியியல், உளவியல் | நூலகம் அறிவுலக நுழைவு வாயில் | முதுமுனைவர் பேரா.கி.முத்துச்செழியன் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., |
| 22. | வேளாண்மையியல், கால்நடையியல் | தமிழ்நாட்டுத் தாவரக் களஞ்சியம் – சிறுதானியத் தாவரங்கள் | முனைவர் இரா. பஞ்சவர்ணம் | பஞ்சவர்ணம் பதிப்பகம் |
| 23. | கணினியியல் | கணினித் தமிழ் | முனைவர் இல. சுந்தரம் | விகடன் பிரசுரம் |
| 24. | பிறசிறப்பு வெளியீடுகள் | கி.பி.19 சைவமும் தமிழும் சூளை சோமசுந்தரநாயகர் ஆளுமை | முனைவர் நல்லூர் சா.சரவணன் | மங்கை பதிப்பகம் |
| 25. | மகளிர் இலக்கியம் | காலத்தை வென்ற காவிய மகளிர் | நுணாவிலூர் கா.விசயரத்தினம் | மணிமேகலைப் பிரசுரம் |
| 26 | தமிழர் வாழ்வியல் | பண்டைத் தமிழர் பண்பாடு ஒரு புதிய நோக்கு | பேரா.பாலசுந்தரம் இளையதம்பி | குட்புக்ஸ் பப்ளிகேஷன் |

தமிழ்க் கவிஞர் நாளின் நிகழ்வுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 29.04.2018 அன்று முற்பகல் 10.00 மணியளவில் பேரறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடத்தில் நடைபெறும் தமிழ்க் கவிஞர் நாளான பாவேந்தரின் 127ஆம் பிறந்த நாளன்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் தலைமையில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராசன் அவர்கள் 2015ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாசிரியர்கள், பதிப்பகத்தாரர்களுக்குப் பரிசுகள் வழங்கி, விழாப் பேருரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வில், மேனாள் அரசவைக் கவிஞர் ஆ. முத்துலிங்கம், கலைமாமணி வி.ஜி. சந்தோசம், பேராசிரியர் முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் இரா. குணசேகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். பரிசளிப்பு விழாவிற்குப் பின்னர், **தேனிசைச் செல்லப்பா** அவர்களின் கருப்புக் குயிலின் நெருப்புக் குரலிசை நிகழ்வும் **மயூரி குழுவினர்** தமிழிசை ஆடலரங்கமும், புதுச்சேரி பூகம்பம் எனும் தலைப்பில் பேராசிரியர், **முனைவர் உலக நாயகி பழனி** அவர்களின் தனியுரையும் பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணி வரை புரட்சிக் கவிஞரின் படைப்புகளில் விஞ்சியிருப்பது சமூக உணர்வா ? மொழியுணர்வா ? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. சமூக உணர்வே என்ற தலைப்பில் **திரு.பழ.பாசுகரன், செல்வன் வே.து.வெற்றிச்செல்வன், திருமதி ர.ரேகா, செல்வி கா.ரோசலின் அனிசா** ஆகியோரும், மொழியுணர்வே என்ற தலைப்பில், **முனைவர் ப.நாகராசன், கவிஞர் கோ.மணி, செல்வன் த.முனீசுவரன், செல்வி தீன்சா நூஃபா** ஆகியோரும் பேசவுள்ளனர்.

பிற்பகல் 3.45 மணி முதல் 4.45 மணி வரை கவியரங்கம் நடைபெறவுள்ளது. கவியரங்கத்தில் 'மாண்புகள் நீயே' என்ற தலைப்பில் கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டினன், **'வீரனின் வீரமும் நீயே'** என்ற தலைப்பில் கவிஞர் பாரதி சுகுமாரன், **'வீழ்வாரைக் காப்பவள் நீயே'** என்ற தலைப்பில் கவிஞர் முனைவர் இதயகீதம் இராமானுசம், **'செயல் செய்வாய், தமிழுக்கு !'** என்ற தலைப்பில் கவிஞர் துரை. இராசமாணிக்கம், **'எழுக நீ புலவ...!'** என்ற தலைப்பில் கவிஞர் முனைவர் ஈ.விசய், **'ஊழியஞ்செய், தமிழுக்கு!'** என்ற தலைப்பில் கவிதாயினி தர்சிணி மாயா, **'மொழியின்றேல் நாம் யாரோ ?'** என்ற தலைப்பில் கவிஞர் சிந்தை வாசன், **'தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் !'** என்ற தலைப்பில் கவிதாயினி க.மல்லிகா ஆகியோர் கவிபாடுகிறார்கள்.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (நி) திரு.ம.சி. தியாகராசன் அவர்கள் நன்றியுரை ஆற்றவுள்ளார்.

## வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9